# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பீடைகொல்லிகள் கட்டுப்படுத்தல் (திருத்தச்) சட்டம்

---

*(1994, ஏப்ரில் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1994, எப்ரில் மாதம் 08 ஆந் தேதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 — தபாற் செலவு : ரூபா 1.50

Sumith [illegible]
20/08/96

1994 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பீடைகொல்லிகள் கட்டுப்படுத்தல் (திருத்தச்) சட்டம்

[1994, ஏப்ரில் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 52/87

1980 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, பீடைகொல்லிகள் கட்டுப்படுத்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

பீடைகொல்லிகளை இறக்குமதி செய்தல், பொதி செய்தல், சுட்டுத் துண்டிடுதல், களஞ்சியப்படுத்தல், சூத்திரித்தல், கொண்டு செல்லல், விற்பனை செய்தல் அத்துடன் அவற்றின் பயன்பாடு உட்பட பீடைகொல்லிக் கைத்தொழிலை அரசாங்கம் கட்டுப்படுத்துவது பொதுமக்கள் நன்மைக்கு உகந்ததெனப் பாராளுமன்றம் கருதுவதாதலால்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பீடைகொல்லிகள் கட்டுப்படுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தின் விரிவுப்பெயரானது, "சூத்திரிப்புக் குழு" என்னும் சொற்களுக்குப் பதிலாகத் "தொழில்நுட்ப, மதியுரைக் குழு" என்னும் சொற்களை இவைதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"சட்டத்தின் ஏற்புடைமை.

2. இச்சட்டத்திற்கான அட்டவணையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறான, அத்தகைய சூத்திரிப்புக்கள் தவிர்ந்த தீவிர கலவைக் கூறுகளுக்கும் வலுவூட்டிகளுடனான பீடைகொல்லிச் சூத்திரிப்புகளுக்கும் இச்சட்டம் ஏற்புடைத்தாதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பீடைகொல்லிகள் உதவிப் பதிவாளர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) பீடைகொல்லிகள் உதவிப் பதிவாளர் ஒவ்வொருவரும், பீடைகொல்லிகள் பதிவாளரின் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாமென்பதுடன், அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பீடைகொல்லிகள் பதிவாளரின் கட்டுப்பாட்டுக்கும் பணிப்புக்கும் அமைந்தவராதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்:—

"(1) ("குழு" என இதனகத்துப் பின்னர் குறிப்பீடு செய்யப்படும்) பீடைகொல்லி தொழில்நுட்ப மதியுரைக் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்—

(i) (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கைத்தொழில் பணிப்பாளர் அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர்;

(ii) (இதனகத்துப் பின்னர் "பதிவாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பீடைகொல்லிகள் பதிவாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர் ;

(iii) அரசாங்க பகுப்பாய்வாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர் ;

(iv) சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரின் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர் ;

(v) தொழில் ஆணையாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர் ;

(vi) 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர் ;

(vii) (430 ஆம் அத்தியாயமான) றப்பர் ஆராய்ச்சிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட றப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர் ;

(viii) 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் தவிசாளரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அல்லது அத்தகைய நிறுவகத்தின் அத்தகைய உறுப்பினரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர் ;

(ix) 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர் ;

(x) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகார சபையின் தவிசாளரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அத்தகைய அதிகார சபையின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(ஆ) பீடைகொல்லி உபயோகம், பீடை கட்டுப்பாடு மற்றும் அதோடு தொடர்புடைய விஞ்ஞானத் துறை ஆகியவற்றில் அனுபவமுள்ள அமைச்சரால் நியமிக்கப்படும் ஐந்துக்கு மேற்படாத ஆட்கள் :

ஆயின், எவ்வாறுயினும் பீடைகொல்லி உற்பத்தி, இறக்குமதி, சந்தைப்படுத்தல், சூத்திரித்தல், களஞ்சியப்படுத்தல், கொண்டு செல்லல் அல்லது விற்பனை ஆகியவற்றின் வர்த்தக ரீதியான அக்கறை கொண்டுள்ள ஆளெவரும் நியமிக்கப்படலாகாது." ; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும் :—

"பீடைகொல்லி தொழில்நுட்ப மதியுரைக்குழு ;".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) பீடைகொல்லிகள் பதிவு செய்யப்படுதல், கொள்கலன்களுக்கு அங்கீகாரம் வழங்குதல், களஞ்சியப் படுத்துதல், சூத்திரித்தல், இறக்குமதி செய்தல்

விற்பனை செய்தல் அத்துடன் பீடைகொல்லிகளைப் பயன்படுத்துதல் தொடர்பிலான ஏதேனும் முக்கிய விடயத்தின்மீதும் அத்துடன் அது தொடர்பில் விதித்துரைக்கப்படக்கூடியவையான அத்தகைய வேறு விடயத்தின்மீதும் பதிவாளருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஆ) அத்தகைய குழுவுக்கு, அது அதன் பணிகளைப் புரிகையில் உதவி செய்வதற்குத் தொழில்நுட்ப உப குழுக்களை நியமித்தல் ;" அத்துடன்

(2) அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "குழுவின் எல்லா உறுப்பினர்களினதும் கூட்டமொன்றில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குழுவின் கூட்டம் ஒன்றில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அதன் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) பீடைகொல்லிச் சூத்திரிப்பிலான தீவிர கலவைக் கூறுகளின் தொழில்நுட்பத் தரத்தில் உற்பத்தியாளரின் பெயரும், முகவரியும் அத்துடன் எப் பீடைகொல்லிச் சூத்திரிப்புத் தொடர்பாக அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதோ அப் பீடைகொல்லிச் சூத்திரிப்பின் தயாரிப்பாளரது பெயரும் முகவரியும் ;".

(ii) அதன் (ஊ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஊ) அத்தகைய பீடைகொல்லியின் உபயோகங்கள் வலு, களஞ்சியப்படுத்துதலில் நிலையாயிருக்கும் தன்மை மற்றும் அது பயன்படுத்தப்படக்கூடிய காலப்பகுதி பற்றி உற்பத்தியாளரால் அல்லது தயாரிப்பாளரால் செய்யப்படும் உரிமைக்கோரிக்கை பற்றிய கூற்றொன்று அத்துடன், சான்றாக ஏதேனும் பரிசோதனைத் தரவுகள் மூலம் ஆதாரப்படுத்தப்படும் அதன் சக்தி மற்றும் பயிர் பாதுகாப்புப் பற்றிய கூற்றொன்று ;"; அத்துடன்

(iii) அதன் (எ), (ஏ), (ஐ), அத்துடன் (ஒ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(எ) அத்தகைய பீடைகொல்லியின் சேர்மானப் பொருட்கள், எத்தொழில்நுட்பத் தரப்பொருளிலிருந்து பீடைகொல்லி சூத்திரிப்பு தயாரிக்கப்பட்டதோ அப்பொருளின் இரசாயன மற்றும் பௌதிக குணங்கள் உட்பட அதன் இரசாயன அடையாளம் அதன் தேறிய எடை மற்றும் அதிலுள்ள ஐசோமர் அசுத்தப்பொருள் அத்துடன் வேறு துணை உற்பத்திப்பொருட்கள் ஆகியவற்றின் அடையாளம் மற்றும் அளவு ஆகிய பற்றிய கூற்றொன்று ;

(ஏ) விதந்துரைக்கப்பட்டவாறு அதனைப் பயன்படுத்தப்படும் போது, அதனைப் பயன்படுத்துகின்றவர்களுக்கோ அல்லது பரிகரிக்கப்பட்ட பயிர்களை நுகர்ந்தவருக்கோ தீமையான விளைவுகளை ஏற்படுத்தமாட்டாது என்பதைக் காட்டுவதற்காக முறிமருந்து பற்றிய தகவல்கள் உட்பட அத்தகைய பீடைகொல்லி பற்றிய போதியளவு நஞ்சியல் தரவுகள் ;

(ஐ) சான்றாக அமைந்த பகுப்பாய்வுகளின் விளைவுகளுடனான சூத்திரிப்புக் கலவையில் பகுப்பாய்வு முறைகள் ; அத்துடன்

(ஒ) உணவுகளிலும், மிருக உணவுகளிலும் பணிக்கப்பட்டவாறு பயன்படுத்தியபின், அத்தகைய பீடைகொல்லியின் படிவுகளைத் தீர்மானிப்பதற்கு சான்றாகவுள்ள எவையேனும் பரிசோதனைகளின் விளைவுகளுடனான முறைகள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின், அவ்வுட்பிரிவின் (அ), (ஆ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

"(அ) அந்தப் பீடைகொல்லியைப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், மூன்றாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கு வலுவுடையதான உரிமத்தை வழங்குதலும் வேண்டும் ; அல்லது

(ஆ) அந்தப் பீடைகொல்லியைத் தற்காலிகமாகப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், உரிமம் வழங்கப்படும்வரை அல்லது ஓர் உரிமத்துக்குப் பதிலாக, இடைக்கால அனுமதிச்சீட்டொன்றின் விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கிணங்கப் பீடைகொல்லியின் மட்டுப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்துவதற்கும், பயன்பாட்டிற்குமாகப் பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு வலுவுடையதான அத்தகைய இடைக்கால அனுமதிச்சீட்டை வழங்குதலும் வேண்டும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட வரைவுச் சுட்டுத்துண்டின் பிரதி, பின்வரும் விபரங்களைக் கொண்டிருந்தாலன்றி, 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் உரிமம் ஒன்றைப் பதிவாளர் வழங்குதலாகாது ;

(அ) பீடைகொல்லி எந்த வியாபாரப் பெயரின்கீழ் விற்கப்படவுள்ளதோ அந்த வியாபாரப் பெயரும், அதன் பயன்பாட்டு வகுதியும் ;

(ஆ) பீடைகொல்லியின் வியாபாரப் பெயருக்குப் பயன்படுத்தப் பட்ட எழுத்துக்களின் அளவில் அரைவாசியிலும் பார்க்கச் சிறியதாயிராத அளவிலான எழுத்துக்களில் பீடைகொல்லியின் இவிர கலவைக்கூறுகளின் பொதுவான பெயர்கள் இவை வியா பாரப் பெயர்களுக்கு நேர்கீழே இடப்படுதல் வேண்டும் ;

(இ) திண்மச் சூத்திரிப்பின் விடயத்தில் ஒரு விகிதாசாரமாக அல்லது ஒரு கிலோ கிராமுக்கு எவ்வளவு கிராம் என்றும், திரவச் சூத் திரிப்பின் விடயத்தில் லீற்றர் ஒன்றுக்கு எத்தனை கிராம் என் றும் எடுத்துரைப்பதான எல்லா இவிரக்கலவைக் கூறுகளினதும் சேர்க்கைகள் ;

(ஈ) உரிமத்தைக் கொண்டிருப்பவரின் பெயரும் முகவரியும்;

(உ) பீடைகொல்லி கடைசியாகப் பயன்படுத்தப்பட்டதற்கும், அது எந்தப் பயிருக்குப் பயன்படுத்தப்பட்டதோ அந்தப் பயிரின் அறுவடைக்கும் சந்தைப்படுத்தலுக்கும், இடையில் கழியவேண் டியுள்ள காலப்பகுதியையும், அத்துடன் பதிவாளர் தோதான தெனக் கருதுமிடத்து பீடைகொல்லியின் பயனுறு காலம்பற்றிய தகவலையும் உள்ளடக்கிப் பீடைகொல்லியைப் பயன்படுத்த வேண்டியுள்ள முறைபற்றிய போதிய பணிப்புகள்;

(ஊ) விரிவான அறிவுறுத்தல்களைத் தருகின்றதான பொதியிலுள்ள துண்டுப் பிரசுரமும் அவசியமானபோது குறைநிரப்பப்பட்ட முதலுதவி, முறிமருந்து என்பனபற்றிய தகவலையும் உள்ளடக்கு வதாக போதிய முன்னெச்சரிக்கையும், மூற்காப்புச் சின்னங் களும் கூற்றுக்களும்;

(எ) பீடைகொல்லியானது இச்சட்டத்தின்கீழ் உரிமம் பெற்றுள்ள தென்பதைச் சுட்டிக்காட்டுகின்ற உத்தியோகபூர்வமான சின்ன மாக இருக்கவேண்டிய "பதிவுசெய்யப்பட்டுள்ளது" என்ற சொல்லும், பதிவாளரால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட உரிய இலக்கமும்;

(ஏ) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்டவாறான வேறெவை யேனும் விபரங்கள் :

தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில்;

ஆயின், எவ்வாறாயினும், (அ), (ஆ), (ஊ) என்னும் பந்திகளில் எடுத் துக்காட்டப்பட்டுள்ள விபரங்கள் மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப் பிடப்படுதல் வேண்டும்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"அங்கீகாரமளிக்கப்பட்ட பீடைகொல்லிகள்.

9. பதிவாளர் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்றை வழங்குகின்றவிடத்து, அவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம்—

(அ) அப்பீடைகொல்லியை அங்கீகாரமளிக்கப்பட்ட பீடைகொல்லியொன்றாக வெளிப்படுத்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய பீடைகொல்லியை மட்டுப்படுத்தப்பட்ட பொதுவான, அல்லது வீட்டுப் பாவனைக்கான பீடைகொல்லியென வகைப்படுத்தல் வேண்டும்,".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அங்கீகரிக்கப்பட்டுள்ள கொள்கலன் ஒன்றில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒழுக்கில்லாக் கொள்கலன் ஒன்றில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(2) அப்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்:—

"ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள்—

(i) குழுவின் விதப்புரைமீது பீடைகொல்லி எதுவும், நோய் ஒன்று திடீரெனப் பரவியுள்ளவிடத்து அல்லது பீடை திடீரெனப் பரவியுள்ளவிடத்து, அதற்கு எதிராகச் செயற்படுத்துவதற்கென இறக்குமதி செய்யப்படுகின்றவிடத்தான விடயம் எதற்கும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி ஒழுங்கமைப்பு எதுவும், பதிவாளரின் எழுத்திலான அங்கீகாரத்துடன், ஆராய்ச்சி நோக்கத்துக்கெனப் பீடைகொல்லிகள் அல்லது பீடைகொல்லி சூத்திரிப்பின் குறித்துரைக்கப்பட்ட தொகை எதனையும் இறக்குமதி செய்கின்றவிடத்தான விடயம் எதற்கும்,

ஏற்புடைத்தாகாது.".

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "திணைக்களத்தின் அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய எண்ணிக்கையினரான கமத்தொழில் அலுவலர்களை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும், அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்

"(ஆஆ) அத்தகைய பீடை கொல்லிகள் பட்டியலொன்றைத் தயாரித்து அத்தகைய பட்டியலின் பிரதிகளை விற்பனையாளரிடம் அல்லது அவருடைய முகவரிடமும் அத்துடன் பதிவாளரிடமும் கையளித்த பின்னர், 14 ஆம் அல்லது 21அ என்னும் பிரிவை மீறி விற்பனைக்காக முன்வைக்கப்பட்ட பீடைகொல்லி எதனையும் இச் சட்டத்தின் கீழ் குற்ற வழக்கொன்று தொடரும் நோக்கத்துக்காகப் பறிமுதல் செய்து அவசியமாகக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குத் தடுத்து வைத்திருக்கலாம்.;".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 21அ என்னும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"சான்றிதழின்றி விற்பனை செய்தல் தடைசெய்யப்படுதல்.

21அ. (1) எவரேனும் ஆள், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, ஏதேனும் பீடை கொல்லியை விற்பனை செய்தல் ஆகாது அல்லது விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும், எவரேனும் ஆள், சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்ளாது வீட்டுப் பாவனைக்கான பீடை கொல்லியை விற்கலாம் அல்லது விற்பனைக்காக வெளிக்காட்டி வைக்கலாம்.

(3) சான்றிதழுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(4) விற்பனைக்கான ஒவ்வொரு சான்றிதழும் —

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்;

(ஆ) முன்னர் இல்லாதொழிக்கப்பட்டாலேயொழிய, வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்கு வலுவிலிருத்தலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட சான்றிதழ், பீடைகொல்லி எங்கு விற்பனை செய்யப்படுகிறதோ அங்கு தாலாம்பரமான இடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

"(1) (அ) 6 ஆம் உட்பிரிவின்கீழ், பீடை கொல்லியொன்றிற்கு உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும்; அல்லது

(ஆ) 7 ஆம் பிரிவின்கீழ், பீடை கொல்லியொன்றின் உரிமம் பெறுதலைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொவ்வொன்றும்; அல்லது

(இ) 21அ என்னும் பிரிவின் கீழான சான்றிதழுக்கான விண்ணப்பமொவ்வொன்றும், அல்லது

(ஈ) 13 ஆம் பிரிவின் கீழான ஏதேனும் நிராகரிப்புக்கு, இல்லாதாக்குகைக்கு, இடைநிறுத்துகைக்கு, மீளப்பெறுகைக்கு அல்லது திரிபுபடுத்துகைக்கு எதிரான ஒவ்வொரு மேன்முறையீடும்,

இச்சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள "இரண்டு ஆண்டுக் காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதல் வேண்டும்." என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 24அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

16. பின்வரும் புதிய பிரிவு, முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது, அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

குற்ற வழக்குகளைத் தொடுத்து நடாத்துவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்.

24அ. (1) சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, பதிவாளர், எவரேனும் உணவுப் பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர், கிராமசேவை அலுவலர், தொழில் பரிசோதகர் அல்லது பதிவாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலர் இச்சட்டத்தின்கீழ் குற்ற வழக்குகளைத் தொடுத்து நடாத்துவதற்குத் தத்துவமுடையவர்களாதல் வேண்டும்.

(2) பதிவாளரினால் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும் —

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கப் பீடை கொல்லி பொதி செய்யப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆளெவரும் 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறியிருக்கிறாரா ?

(இ) வியாபாரி ஒவ்வொருவரினதும் விற்பனைக்கான சான்றிதழொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றதா

என உறுதி செய்வதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழான அவரது பணிகளைப் புரிவதில் நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் போதுமான அறிவித்தலைக் கொடுத்துவிட்டு எவையேனும் வளவுகளுக்குட்புகலாம். அத்தகைய அலுவலர் இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு அவசியமானதான அத்தகைய உட்புகுதல் நிமித்தம் அல்லது அவ்வாறு உட்புகுந்ததன் பின்னர் அத்தகைய வளவுகளில் நல்லெண்ணத்துடன் செய்த எதற்கும் பொறுப்பாதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அந்த உட்பிரிவின் (V) என்னும் பந்தியில் உள்ள "குறிப்பிடலாம் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குறிப்பிடலாம்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ii) அந்த உட்பிரிவின் (VI) என்னும் பந்தியில் உள்ள "பீடைகொல்லிகளைப் பயன்படுத்தும் மாதிரியையும் முறையையும் விதித்துரைக்கலாம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"பீடைகொல்லிகளை விற்பனை செய்யும், பயன்படுத்தும், மாதிரியையும் முறையையும் விதித்துரைக்கலாம், அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iii) அவ்வுட்பிரிவின் (VI) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(vii) பொது உடனலத்திற்கு ஊறுவிளைவிப்பதெனக் கருதப்படுகின்றதான எவையேனும் பீடைகொல்லிகளை இறக்குமதி செய்தலை அல்லது உற்பத்தி செய்தலைத் தடை செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) "அதிகாரமளிக்கப்பட்ட பகுப்பாய்வாளர்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"அதிகாரமளிக்கப்பட்ட பகுப்பாய்வாளர்" என்பது அரசாங்கப் பகுப்பாய்வாளர், மேலதிக அரசாங்க பகுப்பாய்வாளர் ஒருவர், பிரதி அரசாங்க பகுப்பாய்வாளர் ஒருவர்,

சிரேட்ட உதவி அரசாங்க பகுப்பாய்வாளர் ஒருவர், உதவி அரசாங்க பகுப்பாய்வாளர், கமத்தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த மத்திய கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவகத்தின் இரசாயனவியலாளர், இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகத்தின் பகுப்பாய்வாளர் ஒருவர், இலங்கைக் கட்டளைப் பணியகத்தின் பகுப்பாய்வாளர் ஒருவர் அத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் அமைச்சரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர் என்று பொருளாகும்.".

(ii) "அதிகாரமளிக்கப்பட்ட பகுப்பாய்வாளர்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :—

"வீட்டுப்பாவனைக்கான பீடை கொல்லி" என்பது, முக்கிய சேர்மானப் பொருட்கள் குறைந்த நச்சுத்தன்மையுடைய அல்லது எப்பீடை கொல்லியில் அத்தகைய முக்கிய சேர்மானப் பொருட்கள் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதனால், வழமையான பாவனையில் ஆபத்து விளைவித்தல் சாத்தியமில்லையோ அப்பீடை கொல்லி சூத்திரிப்பு எனப் பொருள்படும் ;

"பொதுப்பீடை கொல்லி" — என்பது, மட்டுப்படுத்தப்பட்ட பீடைகொல்லியாக அல்லது வீட்டுப் பாவனைக்கான பீடை கொல்லியாக வகைப்படுத்தப்பட்ட பீடை கொல்லி சூத்திரிப்புத் தவிர்ந்த வேறு பீடைகொல்லி சூத்திரிப்பு எனப் பொருள்படும்.".

(iii) "பீடை" என்பதன் வரைவிலக்கணத்தில் "மனிதனின் புறவெட்டுண்ணிகளையும் விலங்குகளின் புறவெட்டுண்ணிகளையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மனிதனின் புறவெட்டுண்ணிகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்.

(iv) "பீடைகொல்லிச் சூத்திரிப்புக்கள்" என்பதன் வரைவிலக்கணத்தில், "அவ்வாறு பெயர் குறிக்கப்பட்ட அதையொத்த தயாரிப்பையும் உள்ளடக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவ்வாறு பெயர் குறிக்கப்பட்ட அதையொத்த தயாரிப்பையும் உள்ளடக்கும் ஆனால் பெரும்மோன்களை உண்டாக்காது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(v) "பீடைகொல்லி சூத்திரிப்பு" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணத்தைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் :—

"மட்டுப்படுத்தப்பட்ட பீடைகொல்லி" என்பது, மனித சுகாதாரம் குறிப்பிட்ட இலக்கு வைக்கப்படாத உயிரினம் அத்துடன் சூழல் ஆகியவை மீது பாதகமான பயன்கொண்டதாக இருக்கக் கூடியதாவதும் அத்துடன் அதைக் கையாளும் விதம் அல்லது அதன் உபயோகம் அல்லது விநியோகம் தொடர்பில் மட்டுப்பாடு சுமத்தப்பட்டுள்ளதுமானதுமான பீடைகொல்லிச் சூத்திரிப்பு எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்குப் புதிய அட்டவணையொன்றைச் சேர்த்தல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் முடிவில் பின்வரும் புதிய அட்டவணை இத்தால் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது :—

"அட்டவணை (பிரிவு 2)

கெப்தனின்

பாரடைக்குளோரோ பென்சின்

செல்லப்பிராணி பராமரிப்புச் சாம்பூ

பீடைக் கட்டுப்பாட்டு உபாயங்களுக்கான நச்சுத்தன்மையற்ற பசைகள்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

20. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 256, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.